திருப்புவனம் தேசிய நெடுஞ்சாலையில் தடுப்புச் சுவர் கட்டுதல்.

127—(*வினா எண். 10604) திரு. க. பாரமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி, திருப்புவனம் நகரப் பஞ்சாயத்தின் நடுவே செல்லும் தேசீய நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் சாலை அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): மானாமதுரை தொகுதி, திருப்புவனம் நகரப் பஞ்சாயத்தின் நடுவே செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் சாலை அரிப்பைத் தடுக்க, தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. என்றாலும், வைகை ஆற்றின் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் மேற்படி பகுதியையும் உள்ளடக்கி, தேசிய நெடுஞ்சாலை எண். 49-ல் கி.மீ. 16/0 முதல் 21/0 வரையிலான பகுதியை உறுதிப்படுத்தும் வேலைக்காக ரூ. 81.26 இலட்சத்திற்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 81 இலட்சத்தில் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது? அதை விரைவாக மத்திய அரசிடமிருந்து பெற்று நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது எந்தத் தேதியில் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு இல்லை. கடந்த ஆண்டு அனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1986—87-ல் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலை எண். 49 என்பது இரண்டு மாவட்டங்களின் தலைநகர்களை இணைக்கிற ஒரு முக்கியமான தேசிய நெடுஞ்சாலையாகும். வெள்ளம் வருகிறபோது அதற்குப் பக்கத்தில் இருக்கிற இடங்களிலே வெள்ள அரிப்பு ஏற்பட்டு கிராமங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டு வேறு வழியில்லாமல் ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலம் போடுகிற நிலைமை ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து

1987 நவம்பர் 16]

சென்ற வெள்ளக்காலத்தில் கூட 3, 4 இடங்களில் சிறிய பாலங்களைக் கட்ட வேண்டுமென்று குறிப்புகள் அரசிடம் இருந்தன. செல்ஃபா ப்ராஜக்ட் என்ற திட்டத்தில்தான் இம் மாதிரியான திட்டங்களைச் சேர்த்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட திட்டங்களை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சிறிய அளவில் மழை பெய்து அதனால் வரக்கூடிய வெள்ளத்தைத் தடுத்தோ அல்லது அதிலே பாதிப்பு இல்லாமல் போக்குவதற்கோ வழிவகை செய்ய முடியும். ஆனால் ஹெலிகாப்டரிலே இருந்து பொட்டலம் போடுகின்ற அளவுக்கு அவ்வளவு பெரிய வெள்ளம் ஏற்படுகிற நிலைமை இருக்கிறது என்றால் எவ் வளவு நல்ல சாலையாக இருந்தாலும் தண்ணீரில் மூழ்கக் கூடிய நிலைமைதான் ஏற்படும். இருந்தாலும், சிறிய பாலங்களைப் பொறுத்தவரையில் முன்னுரிமை கொடுப்பதற்கான நடவடிக் கைகளை எடுப்பது குறித்து பரிசீலனை செய்யலாம்.

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இன்சூர் செய்தல்

128—(*வினா எண். *11388*) **திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இன்சூர் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 94-ன் படி அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் மோட்டார் வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் பாலிசி எடுப்பதிலிருந்து விலக் களிக்கப்பட்டுள்ளது. கழக பேருந்துகளினால் விபத்துக்குள்ளா னவர்களுக்குச் சட்டப்படி நட்ட ஈட்டுத் தொகை அளிக்க அரசு போக்குவரத்துக் கழகங்களே காப்பீட்டு நிதி ஏற்படுத்திக் கொள்ளலாமென வகை செய்யப்பட்டு உள்ளது. ஆகவே போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு இன்சூரன்ஸ் எடுக்கப் படுவதில்லை.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் புன்னகையோடு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நடைமுறையில் அந்தப் பேருந்து களில் ஏற்படுகிற இழப்புகள் எப்படி ஈடு கட்டப்படுகின்றன. அவற்றால் ஏற்படுகிற நட்டங்களைக் கழகங்கள் எப்படி ஈடு கட்டுகின்றன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS